RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 154 | ஜூன்.9, 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## முருக பக்தர்கள் மாநாடு : காங்., கம்யூனிஸ்ட், விசிக விமர்சனத்துக்கு இந்து முன்னணி பதில்



சென்னை: ஜூன்.9-

"முருக பக்தர்கள் விழிப்புணர்வு பெற்று மாநாடு நடத்துகிறார்கள் என்றவுடன் அதற்கு அரசியல் சாயம் பூசி, திசை திருப்பி இந்துக்களை குழப்ப காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விசிக போன்ற கட்சி தலைவர்கள் முயல்கிறார்கள். இவர்களின் கருத்துக்களால் இந்துக்களிடையே மிகுந்த எழுச்சி ஏற்பட்டு வருவதை கண்கூடாகக் காண முடிகிறது" என்று இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி. சுப்ரமணியம் சாடியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்து முன்னணி ஜூன் 22ல் மதுரையில் முருக பக்தர்கள் மாநாடு நடத்துகிறது. மாநாட்டில் லட்சக்கணக்கானோர் ஒன்றினைந்து கந்த சஷ்டி கவசம் படிக்க இருக்கிறார்கள். முருகபக்தர்கள் கந்த சஷ்டி கவசம் படித்து மாநாடு நடத்துவது இந்து விரோத காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விசிக போன்றோருக்கு அரசியல் மாநாடாகத் தெரிகிறது.

கடந்த வருடம் கடவுள் இல்லை, முருகன் இல்லை, விநாயகர் இல்லை என்று இந்து கடவுள், இந்து வழிபாடு மட்டும் இல்லை என்று போலி நாத்திகம் பேசும் திமுக, முத்தமிழ் முருகன் மாநாடு என்று தங்கள் புகழ்பாடியபோது அது அரசியல் மாநாடாகத் தெரியவில்லையா? முத்தமிழ் முருகன் மாநாடு என்று தலைப்பிட்டு முன் வரிசையில் முஸ்லீம்களை அமர வைத்து மாநாடு நடத்துவது எந்த வகையிலான மாநாடு என பக்தர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

கந்த சஷ்டி கவசத்தை இழிவுபடுத்தியவர்களுக்கு விருது வழங்கி திமுக சிறப்பித்த போது, காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விசிக ஆகியோருக்கு அரசியலாகத் தெரியவில்லையா? அரசியலில் ஈடுபடாத சமூக இயக்கமான இந்து முன்னணி நடத்தும் முருக பக்தர்கள் மாநாட்டுக்கு அரசியல் சாயம் பூச முற்படுவதேன்? தினமும் இந்துக்களின் வழிபாட்டை விமர்சனம் செய்து கொண்டிருக்கும் போலி மதசார்பற்ற கட்சிகளின் கயமைத்தனத்தை உணர்ந்து, மாநாடு மூலம் இந்துக்கள் விழித்துக்கொள்வார்களே என்ற பயமும் பதற்றமும் இந்து விரோத காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விசிக தலைவர்களின் கருத்துகள் மூலம் அப்பட்டமாகத் தெரிகிறது.

நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும் திருப்பரங்குன்றம் மலை மீது தீபம் ஏற்றப்படவில்லை. திருப்பரங்குன்றம் மலையில் அசைவம் தின்று அக்கிரமம் செய்தபோதும், கந்த சஷ்டி கவசம் அவதூறு செய்யப்பட்ட போதும் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விசிகவினர் எங்கே போனார்கள்? இப்போது பக்தர்கள் மாநாடல்ல, அரசியல் மாநாடு என்று கருத்து சொல்பவர்கள் யாருக்கும் அப்போது இந்துக்களின் மன குமுறல் கேட்கவில்லையே ஏன்?

முருக பக்தர்கள் விழிப்புணர்வு பெற்று மாநாடு நடத்துகிறார்கள் என்றவுடன் அதற்கு அரசியல் சாயம் பூசி, திசை திருப்பி இந்துக்களை குழப்ப காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விசிக போன்ற கட்சி தலைவர்கள் முயல்கிறார்கள். இவர்களின் கருத்துக்களால் இந்துக்களிடையே மிகுந்த எழுச்சி ஏற்பட்டு வருவதை கண்கூடாகக் காண முடிகிறது. மேலும் இந்துக்களின் எழுச்சி அந்தக் கட்சிகளுக்கு பயத்தையும், பதற்றத்தையும் ஏற்படுத்தி உள்ளதை அவர்களின் கருத்துகள் வெளிப்படுத்துகிறது என்பதை மக்களும், பக்தர்களும் உணர்ந்துள்ளார்கள்.

எனவே இதுபோன்று இந்துக்களை திசைத்திருப்பும் தீய சக்திகளுக்கு பாடம் புகட்ட இந்துக்கள் தன்னெழுச்சியாக மதுரை மாநாட்டுக்கு வாருங்கள் என அறைகூவல் விடுக்கிறோம். ஆகவே எதிர்வரும் ஜூன் 22, முருக பக்தர்கள் மாநாடு முருகனின் அருளால் மாபெரும் வெற்றி பெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி. சுப்ரமணியம் தெரிவித்துள்ளார்.

## தொகுதி மறுவரையறை விவகாரத்தில் பிரதமர் மோடி மீது நம்பிக்கை உள்ளது: சந்திரபாபு நாயுடு

ஹைதராபாத்: ஜூன்.9-

தொகுதி மறுவரையறை விவகாரத்தில் பிரதமர் நரேந்திர மோடி மீது தனக்கு முழு நம்பிக்கை இருப்பதாக ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

மூன்றாவது முறையாக முதல்வராக பதவியேற்ற சந்திரபாபு நாயுடு, இதில் முதல் ஆண்டை ஜூன் 12ம் தேதி நிறைவு செய்கிறார். மக்களவை தொகுதி மறுவரையறையை மேலும் 25 ஆண்டுகளுக்கு கடந்த 2001 ஆம் ஆண்டு பிரதமர் வாஜ்பாய் ஒத்திவைத்தபோது, அதற்கான அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொள்வதில் முக்கிய பங்கு வகித்தவர் சந்திரபாபு நாயுடு. அப்போதைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் கட்சியும் இருந்தது.

இந்நிலையில், தொகுதி மறுவரையறை விவகாரம் தொடர்பாக பேட்டி அளித்த சந்திரபாபு நாயுடு, "பிரதமரின் புத்தி கூர்மை மீது எனக்கு 100% நம்பிக்கை உள்ளது. அவர் அனைவருடனும் இணைந்து பணியாற்றுவார். அதன் பிறகே [தொகுதி மறுவரையறையை] முன்னெடுப்பார்.

2001ம் ஆண்டு தொகுதி மறுவரையறை மேலும் 25 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது. தென் மாநிலங்களின் உணர்வின் காரணமாக அது செய்யப்பட்டது. அந்த நேரத்தில், தென்னிந்தியாவில் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த முடிந்தது என்று நாங்கள் நினைத்தோம். அது நல்ல விஷயம். இப்போது வட இந்தியா, மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தும்.

இன்று, மக்கள்தொகை என்பது ஒரு சொத்து என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். எனவே வட இந்தியாவில் அதிக மக்கள் தொகை உள்ளது. அவர்கள் ஒரு நல்ல வேலையைச் செய்துள்ளனர். நாம் நமது உணர்வை அப்படியே வைத்திருக்க வேண்டும். தொகுதி மறுவரையறை நிர்ணயம் குறித்து மத்திய அரசு தனது கொள்கையை வெளியிடும்.

இந்த விஷயத்தில் தற்போதைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, வாஜ்பாய் அரசாங்கத்தைப் போலவே உணர்திறன் மிக்கதாக உள்ளது. வேறு எதையும்விட நாட்டின் நலனே முக்கியம் என்பதில் பிரதமர் மிகத் தெளிவாக இருக்கிறார்.

நிதி ஆயோக் கூட்டங்களில் மக்கள்தொகை மாற்றங்கள் குறித்து பரவலாக விவாதித்தோம். ஆனால் இந்த விவகாரம் குறித்து பிரதமர் மோடியுடன் பேச இன்னும் நேரம் வரவில்லை. பொருத்தமான நேரத்தில் நான் பேசுவேன்.

தொகுதி மறுவரையறை நிர்ணயம் என்ற கோரிக்கையை தென் மாநிலங்கள் மீண்டும் வலியுறுத்தியுள்ளன. ஆனால், பிரச்சினை இன்னும் வரவில்லை. இவ்விஷயத்தில் கோரிக்கை மிகவும் முன்கூட்டியே முன்வைக்கப்படுகிறது. சரியான நேரத்தில் அது விவாதிக்கப்பட வேண்டும். மத்திய அரசு ஒரு கொள்கையுடன் வரும்போது, தென்னிந்தியாவிற்கு ஏதேனும் பிரச்சனை இருந்தால், நாம் பேசலாம். எதுவும் இல்லாமல், நீங்கள் அதை எழுப்பினால், அது வெறும் அரசியல் முழக்கம் மட்டுமே.

தென்னிந்தியாவில் மக்கள்தொகை குறைந்து வருகிறது. வயதான மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. இப்போது, மக்கள்தொகை வளர்ச்சியை நாம் பெரிய அளவில் ஊக்குவிக்க வேண்டும். அதிக குழந்தைகளைப் பெறுவதற்கு ஏதேனும் ஊக்கத்தொகை வழங்கப்படுமா என கேட்கிறீர்கள். உலகின் எந்தப் பகுதியிலும் இதுபோன்ற அறிவிப்புகள் வெற்றிபெறவில்லை. மக்கள், இப்போது குழந்தைகளைப் பெறுவதில்லை. எனவே நாம் அதற்கு நேர்மாறாகச் செல்ல வேண்டும். மக்கள் தொகை மேலாண்மை பற்றி நாம் சிந்திக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

## "திமுகவை தோற்கடிக்க தமிழக மக்கள் காத்திருக்கிறார்கள்" மதுரையில் அமித் ஷா பேச்சு




மதுரை: ஜூன்.9-

"தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அமித்ஷாவால் திமுகவை தோற்கடிக்க முடியாது என்று கூறுகிறார். அவருக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னால் தோற்கடிக்க முடியாமல் இருக்கலாம், ஆனால் தமிழக மக்கள் திமுகவை தோற்கடிக்க காத்திருக்கிறார்கள்" என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசியுள்ளார்.

மதுரை ஒத்தக்கடையில் பாஜக மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் நேற்று (ஜூன் 8) நடைபெற்றது. இக்கூட்டத்தில் அவர் பேசியதாவது: "தமிழகத்துக்கு வந்து தமிழ் மொழியில் பேசமுடியவில்லை என்பதற்காக நான் வருந்துகிறேன். 3,000 ஆண்டு வரலாற்றுப் பெருமை கொண்ட பழமை வாய்ந்த நகரம் மதுரை. வரும் ஜூன் 22ம் தேதி மதுரையில் நடைபெறவுள்ள முருக பக்தர்கள் மாநாட்டை சிறப்பாக நடத்தி தர வேண்டும், என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை பலவிதமான மாற்றங்களுக்கு வித்திடும் மண். அந்தவகையில், இன்று நடந்துள்ள இந்த ஆலோசனைக் கூட்டமும், திமுக ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து வீட்டுக்கு அனுப்பும் மாற்றத்தைக் கொண்டு வரும். 2026 சட்டமன்றத் தேர்தலில், தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியின் பாஜக அதிமுக கூட்டணி ஆட்சி அமைக்கும். நான் நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும், என்னுடைய செவியும் சிந்தையும் தமிழகத்தின் மீதுதான் இருக்கிறது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அமித் ஷாவால் திமுகவை தோற்கடிக்க முடியாது என்று கூறுகிறார். அவருக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னால் தோற்கடிக்க முடியாமல் இருக்கலாம், ஆனால் தமிழக மக்கள் திமுகவை தோற்கடிக்க காத்திருக்கிறார்கள். என்னுடைய நீண்டகால அரசியல் அனுபவத்தில் கூறுகிறேன், தமிழக மக்களின் நாடித்துடிப்பை உணர்ந்து கூறுகிறேன், வரும் சட்டமன்றத் தேர்தலில், தமிழக மக்கள் திமுகவை தூக்கியெறிய காத்திருக்கிறார்கள்.

நம் நாட்டின் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதையடுத்து, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கு தமிழகத்தில் இருந்து நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் வகையில் மிகப்பெரிய எழுச்சியும், ஆதரவும் எழுந்ததை நான் நினைவுகூற விரும்புகிறேன். பஹல்காமில் அப்பாவி மக்களை, மதத்தின் பெயரால் சுட்டுக்கொன்ற பாகிஸ்தான் பயங்கரவாதிகளை, முப்படைகளைத் திரட்டி, பிரதமர் மோடி அவர்களுடைய நாட்டுக்குள் சென்றே தாக்குதல் நடத்தினார். அதுதான் அவர்களுக்கு நாம் புகட்டிய பாடம்.

இதற்கு முன்பும் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தங்களது கைவரிசையைக் காட்டியிருந்தார்கள். ஆனால், இதுபோன்ற தாக்குதல்களை நாட்டை ஆண்ட முந்தைய அரசு நடத்தியது இல்லை. ஆனால், புரி, புல்வாமா மற்றும் தற்போது நடந்துள்ள ஆபரேஷன் சிந்தூர் வரை முப்படைகளும் சேர்ந்து நமது தேசத்தின் வீரதீரத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. பாகிஸ்தானுக்குள் நூறு கி.மீட்டர் பறந்து, பயங்கரவாதிகள் பதுங்கியிருந்த இடங்களைத் துல்லியமாக தாக்குதல் நடத்தி, அவர்களுடைய இருப்பிடங்களை மண்ணோடு மண்ணாக்கியது இந்திய ராணுவம்.

பிரதமர் மோடியின் ஆட்சியில் அனைத்து திட்டங்களும் எப்படி சிறப்பாக செயல்படுத்தப்படுகிறதோ, அதேபோல் தான் ராணுவமும் தன்னிறைவான நிலையைப் பெற்றுள்ளது. அதனால் தான் இந்திய ராணுவம் மிகச் சிறப்பாக செயல்பட்டிருக்கிறது. ஆபரேஷன் சிந்தூர் குறித்து நாம் அனைவரும் பேசிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இந்தியாவின் வான்வெளி சாதனைகள் குறித்து சொல்ல வேண்டியிருக்கிறது. நாட்டின் இளைஞர்கள் காவிரி இன்ஜின் என்ற சொல்லை இப்போது கூறத் தொடங்கி உள்ளனர்.

பாகிஸ்தான் தன்னுடைய ட்ரோன்களையும், ஏவுகனைகளையும் நம் நாட்டின் மீது ஏவத் தொடங்கிய போது, இந்தியாவின் வான்வெளி வல்லமை உலக நாடுகளுக்கு எல்லாம் பறைசாற்றும் வகையில், பாகிஸ்தான் அனுப்பிய அனைத்தையும் அடித்து தூள் தூளாக்கியது இந்திய ராணுவம். ஆபரேஷன் சிந்தூர் இன்னும் முடியவில்லை என்று நம் பிரதமர் கூறியிருக்கிறார். பாகிஸ்தான் பயங்கரவாதிகள் மீண்டும் வாலாட்டினால், அவர்களுடைய இருப்பிடங்களுக்கேச் சென்று தாக்குதல் நடத்தப்படும் என்று பிரதமர் மோடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தல் ஒவ்வொரு பாஜக தொண்டருக்கும் மிக முக்கியமான ஒரு தேர்தல். ஏற்கெனவே 2024 மக்களவைத் தேர்தல் நமக்கு முக்கியமானதாக இருந்தது. அப்போதுதான், பிரதமர் மோடி மூன்றாவது முறையாக இந்நாட்டின் பிரதமராக பதவியேற்றார். 2024ல் தான் ஒடிசாவில், முழு மெஜாரிட்டியுடன் பாஜக ஆட்சி அமைந்தது. ஹரியானாவிலும் மூன்றாவது முறையாக மிகப்பெரிய வெற்றி கிடைத்தது. அதேபோல், மகராஷ்டிராவிலும் இதுவரை இல்லாத அளவில் மிகப்பெரிய வெற்றியை பாஜக பதிவு செய்தது.

2025ல், 27 ஆண்டுகளுக்குப் பிறகு டெல்லியில் பாஜக தலைமையிலான ஆட்சி அமைக்கப்பட்டது. 2025ல் டெல்லியில் எப்படி ஆட்சி அமைக்கப்பட்டதோ, அதேபோல் 2026ல் தமிழகத்தில் பாஜக ஆட்சி அமையப் போகிறது. 2026ம் ஆண்டு நடைபெறும் தேர்தலில், தமிழகம் மற்றும் மேற்கு வங்கத்தில் பாஜகவின் கூட்டணி ஆட்சி அமையும் என்பதை உறுதியாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் நடக்கும் திமுக ஆட்சி ஊழலில் திளைத்திருக்கிறது. பிரதமர் மோடி ஏழை மக்களுக்காக கொடுக்கும் பணத்தை, திமுக அரசு மக்களின் நலனுக்காக செலவிடுவது இல்லை. அந்த தொகையை மடைமாற்றம் செய்து, ஏழையெளிய மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகளை கிடைக்காமல் செய்து வருகின்றனர். திமுக ஆட்சியில் விலைவாசி ஏற்றம் உள்ளிட்டவற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஏழையெளிய மக்கள், மத்திய அரசின் திட்டங்களால் பயன்பெற முடியாமல் தவித்து வருகின்றனர்.

திமக ஆட்சியில் ஊழல் மலிந்து காணப்படுகிறது. டாஸ்மாக்கில் ரூ. 35 ஆயிரத்து 775 கோடி ஊழல் செய்து, தமிழகத்தில் ஊழல் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. தமிழக அரசு நூற்றுக்கு நூறு சதவீதம் தோல்வியடைந்த அரசு. திமுக தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளில் 10 சதவீதத்தைக்கூட நிறைவேற்றவில்லை. ஆனால் 90 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதாக அவர்கள் கூறுகின்றனர். முதல்வர் ஸ்டாலின் அவர்களே, உங்கள் தேர்தல் வாக்குறுதிகளை எடுத்து வாருங்கள். அதைப் பார்த்துவிட்டு கூறுங்கள், அதில் எத்தனை சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றினீர்கள் என்று.

திமுக ஆட்சியில் ஊழல் மட்டுமின்றி, கள்ளச் சாராயத்தால் தமிழகத்தில் அப்பாவி மக்கள் உயிரிழந்துள்ளனர். தென் தமிழகத்தில் நிகழும் சாதிப் பிரச்சினை, பிரிவினைவாத சம்பவங்களில் அரசியல் லாபத்தைக் கருத்தில்கொண்டு திமுக அரசு செயல்படுகிறது. இந்த ஆட்சியில் தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து காணப்படுகிறது. தமிழகத்தில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் இல்லாமல், துன்பத்தில் இருக்கும் சூழல்தான் நிலவி வருகிறது. தமிழக முதல்வருக்கு இதுகுறித்து எந்தவொரு அக்கறையும் கவலையும் இல்லை.

திருப்பரங்குன்றம் ஆயிரம் ஆண்டுகள் பழமையானது. முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான அந்த மலையை 'சிக்கந்தர் மலை' என்று சொல்லக்கூடிய துணிச்சல் இந்த திமுக அரசுக்கு வந்துள்ளது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக முருக பக்தர்களின் வழிப்பாட்டுத் தலத்தை, அரசியல் லாபத்துக்காக பிரிவினைவாத நோக்கத்துடன் அவ்வாறு திமுக பேசிவருகிறது.

எனவே, வரும் ஜூன் 22ம் தேதி மதுரையில் நடைபெறவுள்ள முருக பக்தர்கள் மாநாட்டில், நீங்கள் ஒவ்வொருவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு நம்முடைய வலிமையையும், ஒற்றுமையையும் காட்ட வேண்டும், என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஒவ்வொருமுறை தமிழகம் வரும்போது தமிழக அரசுக்கு நினைவூட்டி வருகிறேன். தமிழகத்தில் தமிழ் தமிழென்று பேசும் நீங்கள், உயர் கல்விக்கான பாடத்திட்டங்களை ஏன் தமிழில் மாற்ற மறுக்கிறீர்கள்? மருத்துவம் மற்றும் பொறியியல் பாடத்திட்டங்களை உடனடியாக தமிழில் மாற்ற வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தின் மரபு சின்னமான, மன்னர்கள் கையாண்ட செங்கோலை, நாட்டின் உயரிய இடமான நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்துக்கு கொண்டு சென்றவர் பிரதமர் மோடி. அப்படி தமிழ் மரபை உயர்த்திப் பிடித்த பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் நன்றி கூறினாரா?

பிரதமர் மோடியின் ஆட்சியில் இந்தியா தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பயணித்து வருகிறது. பத்தாண்டுகால பிரதமர் மோடி ஆட்சியில் இந்தியா 4.19 ட்ரில்லியன் வளர்ச்சியை கண்டுள்ளது. 10 ஆண்டுகால ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் தமிழகத்துக்கு ரூ.1.53 லட்சம் கோடி ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், பாஜக அரசு அதே பத்தாண்டுகளில், தமிழகத்துக்கு வழங்கியது ரூ.6.80 லட்சம் கோடி. தமிழகத்தின் சாலைகள் மேம்பாட்டுக்காக 63 ஆயிரம் கோடி, ரயில்வே கட்டுமானப் பணிகளுக்காக 77 ஆயிரம் கோடி, விமான நிலைய மேம்பாட்டுக்காக 3,500 கோடியை மத்திய அரசு தமிழகத்துக்கு நேரடியாக வங்கியிருக்கிறது.

தமிழகத்தில் திமுக ஆட்சியை எப்போது அகற்றப்போகிறோம்? எப்படி அகற்றப்போகிறோம்? அதற்கு என்ன செய்யப் போகிறோம்? என்று இந்த கூட்டத்துக்கு வந்து செல்லும் கட்சியினர் ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். வரும் 2026ல் நடைபெறவுள்ள தேர்தலில், தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி, பாஜக அதிமுகவுடன் இணைந்து தேர்தலைச் சந்திக்கவுள்ளது. நீங்கள் அனைவரும் திமுகவை ஆட்சியில் இருந்து அகற்றத் தயாராக இருக்கிறீர்களா? அந்த வெற்றிக்கான உறுதிமொழியை எடுத்துக் கொள்ளுங்கள்," என்று அவர் பேசினார்.

## தனியாக வசிக்கும் வயதானவர்களின் தொடர் படுகொலை பலத்த கேள்விகளை எழுப்புகிறது



சென்னை: ஜூன்.9-

வீட்டில் தனியாக வசித்து வரும் வயதானவர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவது பலத்த கேள்விகளை எழுப்புவதாக தமிழக பா.ஜ., முன்னாள் தலைவர் அண்ணாமலை வலியுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை;

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூரில், தோட்டத்து வீட்டில் தனியாக வசித்து வந்த சாமியாத்தாள் என்ற தாயார், கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.

ஏற்கனவே இது போன்ற குற்றங்களுக்காக, சிலர் கைது செய்யப்பட்ட நிலையில், மறுபடியும், தனியாக வசித்து வரும் வயதானவர்கள் படுகொலை செய்யப்படுவது தொடர்வது, பலத்த கேள்விகளை எழுப்புகிறது.

உடனடியாக, இந்தக் குற்றத்தில் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட வேண்டும். மேலும் இது போன்ற குற்றங்கள் தொடராமல் தடுக்க, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பொதுமக்கள் அச்சத்தை போக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அண்ணாமலை கூறி உள்ளார்.

# தாவரவியல் பூங்காவில் மலர் அலங்காரத்தை நீட்டிக்க திட்டம்



ஊட்டி, ஜூன்.09-
சுற்றுலா பயணிகள் பார்வைக்காக தாவரவியல் பூங்கா மாடங்களில் வைக்கப்பட்டுள்ள மலர் அலங்காரம் மேலும், சில நாட்களுக்கு வைக்க பூங்கா நிர்வாகம் முடிவு செய்துள்ளது. ஆண்டு தோறும் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இதனை காண லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருவது வழக்கம். இம்முறை கடந்த மாதம் 15ம் தேதி துவங்கி 25ம் தேதி வரை 11 நாட்கள் ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடந்தது.

மலர் கண்காட்சியை முன்னிட்டு தோட்டக்கலத்துறை சார்பில் பண்டைய தமிழ் அரசர்களின் வாழ்வியல் முறைகளை வெளிக் காட்டும் வகையில் பிரம்மா ண்டமான அரண்மனை நுழைவு வாயில் வடிவமைப்பு 1 லட்சத்து 30 ஆயிரம் மலர்களால் அமைக்கப்பட்டிருந்தது. மேலும், கார்னேசன்,ரோஜா, சாமந்தி போன்ற 2 லட்சம் மலர்களால் சங்க கால அரண்மனை ஒன்று பிரம்மாண்டமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. அத்துடன், 50 ஆயிரம் மலர்களை கொண்டு அன்னப் பறவை அமைக்கப்பட்டிருந்தது. 4 ஆயிரம் மலர்த் தொட்டிகள் மற்றும் 35 ஆயிரம் சாமந்தி,ரோஜா மலர்களால் கல்லணை மாதிரி அமைக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமின்றி, பூங்காவின் பல்வேறு பகுதிகளில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பழங்கால சிம்மாசனம், ஊஞ்சல், கண்ணாடி, இசைக் கருவிகள், பீரங்கி, யானை,புலி, சதுரங்க அமைப்பு போன்ற பல்வேறு மலர் அலங்கார வடிவமைப்புகளும் சிறப்பாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த அலங்காரங்கள் அனைத்தும் வாடிவிட்டன.இதனால், அவைகள் அகற்றப்பட்டது. அதே சமயம் மாடங்களில் 35 ஆயிரம் தொட்டிகளை கொண்டு லில்லியம்,மேரிகோல்டு உட்பட பல்வேறு மலர் தொட்டிகளை கொண்ட மலர் அலங்காரங்கள் வைக்கப்பட்டுள்ளன.ஊட்டி வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை குறையாமல் உள்ளதால், சுற்றுலா பயணிகள் வசதிக்காக மேலும் சில நாட்களுக்கு மாடங்களில் மலர் அலங்காரங்களை வைக்க பூங்கா நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

மேலும், மாடங்களில் வைக்கப்பட்டுள்ள மலர் தொட்டிகளில் உள்ள மலர்கள் வாடினால், உடனுக்குடன் அகற்றப்பட்டு, அந்த இடத்தில் புதிய மலர் தொட்டிகள் கொண்ட அலங்கரித்து வைக்கப்படுகிறது. இதனால், பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் இதனை கண்டு ரசித்து செல்கின்றனர். மேலும், இந்த மலர் அலங்காரங்களை மேலும், சில நாட்களுக்கு நீட்டிக்க பூங்கா நிர்வாகம் முடிவு செய்துள்ளது. எனவே, ஊட்டி வரும் சுற்றுலா பயணிகள் இந்த மலர் அலங்காரங்களை கண்டு ரசித்து செல்லலாம்.

# புற்றுநோய் தடுப்பு, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் முந்திரி பழம் கிலோ ரூ.120க்கு விற்பனை



உடன்குடி, ஜூன்.09-
தேரிக்காட்டு பகுதியில் விளையும் முந்திரி பழம் உடன்குடி பகுதியில் கிலோ ரூ.120க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கொல்லாம்பழம் என்றழைக்கப்படும் முந்திரி பருப்பின் மேல்புறம் விளையும் பழம் இனிப்பு மற்றும் துவர்ப்பு சுவையுடன் இருக்கும். பெரும்பாலும் தேரி பகுதிகளில் மட்டுமே வளரும் இந்த மரங்கள் ஏப்ரல் மாதம் கடைசியில் துவங்கி மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்கள் வரை கனி தருவது வழக்கம். தேரி பகுதியில் விளையும் இந்தப் பழங்கள் அதிக சுவையுடன் இருப்பதாலும், பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ளதாலும் பழங்களின் விற்பனை ஜரூராக நடந்து வருகிறது. தேரிப்பகுதியில் இருக்கும் கொல்லாம் பழமரங்கள் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த மரங்களை குத்தகைக்கு விட்டு பழங்கள், முந்திரி கொட்டைகள் சேகரிக்க படுவது வழக்கம். கொல்லாம் பழங்களில் அதிகளவு மருத்துவ குணங்கள் உள்ளன. மா, பலா, ஆரஞ்சு போன்று அதிக சத்துகள் நிறைந்தது முந்திரிபழம். முக்கியமாக வைட்டமின் சி ஆரஞ்சு பழத்தை விட, முந்திரி பழத்தில் ஐந்து மடங்கு அதிகமுள்ளது. வைட்டமின் சி மனித உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகின்றது. ஈறுகளில் ஏற்படும் ரத்தக்கசிவு நோயை குணமாக்குகின்றது. பற்கள், நகங்களை உறுதிப்படுத்துகின்றது. ஸ்கர்வி என்ற வைட்டமின் சி குறைபாடு நோயை குணமாக்குகின்றது. மேலும், கிருமி நாசினியாக செயல்பட்டு தொற்று வியாதிகளை குணமாக்க பயன்படுகின்றது. இவற்றில் புரதம், பீட்டோ கரோட்டின், நார்ச்சத்துகள் நிறைந்துள்ளன. தேரி காட்டு பகுதியில் விளைந்த இந்த முந்திரி பழம் உடன்குடி பகுதியில் விற்பனைக்கு வந்துள்ளது. தற்போது ஒரு கிலோ பழம் ரூ.120க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் கூறுகையில், முந்திரி வெப்பமண்டல பகுதிகளில் அதிகளவில் சாகுபடியாகிறது. தமிழகத்தில் அரியலூர், கடலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் அதிகளவு பயிர் செய்யப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் தேரி காட்டு பகுதியில் முந்திரி சாகுபடி செய்யப்படுகிறது. நம்மிடையே முந்திரி கொட்டைகளை போல முந்திரி பழங்களை பயன்படுத்துவது குறைவு. நாட்டில் உற்பத்தியாகும் 500 டன் முந்திரி பழங்களில் 10 சதவிகிதம் கூட பயன்படுத்துவதில்லை. ஏனெனில் பழத்தில் உள்ள டானின் எனும் வேதிப்பொருளே காரணம். இதனால் பழம் சாப்பிடும்போது தொண்டையில் கரகரப்பு தன்மை ஏற்படுகிறது. இதனை போக்க பழத்தை நீராவியில் பத்து நிமிடம் வேகவைத்து அல்லது உப்புநீரில் ஊறவைத்து சாப்பிடலாம்.

இந்த பழங்களில் பொட்டாசியம், கால்சியம், மக்னீசியம், தாமிரம், துத்தநாகம், இரும்புச்சத்து போன்ற அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. புற்றுநோய் தடுப்பு, நோய் எதிர்ப்பு மண்டலம் வலுவடைதல், சரும ஆரோக்கியம் மேம்படுதல் போன்ற பல நன்மைகள் முந்திரிப் பழத்தில் கிடைக்கின்றன' என்றனர்.

# மோதிரமலை பகுதியில் யானை கூட்டம் அட்டகாசம்: பொதுமக்கள் அச்சம்

அருமனை, ஜூன்.09-
கடையால் அருகே மோதிரமலையில் யானைகள் கூட்டம் அட்டகாசம் செய்ததால் பொதுமக்கள் அச்சத்தில் உள்ளனர். குமரி மாவட்டம் கடையால் அருகே உள்ள மோதிரமலையில் ஏராளமான பொதுமக்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதி மக்கள் தங்களது விளை நிலங்களில் பல்வேறு பயிர்களை சாகுபடி செய்து பராமரித்து வருகின்றனர். இதற்கிடையே வனப்பகுதியில் இருந்து அவ்வப்போது வெளியேறும் யானை கூட்டம் மோதிரமலை பகுதியில் உள்ள விளைநிலங்களுக்குள் புகுந்து பயிர்களை சேதப்படுத்தி வரும் சம்பவங்கள் நடந்து வருகின்றன. இந்த நிலையில் நேற்று அதிகாலை மோதிரமலை கொழஞ்சிமடம் பகுதியில் காட்டு யானைகள் புகுந்து அட்டகாசம் செய்தது. அங்கு அன்னாசி, வாழை, தென்னை மரங்களை நாசம் செய்துவிட்டு காட்டுக்குள் மறைந்தது.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டனர். அப்போது வனத்துறையினரிடம் தொடர்ந்து அட்டகாசம் செய்து வரும் யானை கூட்டத்தை அடர்ந்த வனப்பகுதிக்கு விரட்டியடிக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். பொதுமக்களை தாக்குவதற்கு முன் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அச்சத்துடன் கூறினர். இதையடுத்து வனத்துறை அதிகாரிகள் யானைகள் இருக்கும் இடத்தை கண்டறிந்து அவற்றை வனப்பகுதிக்கு விரட்டும் பணியில் ஈடுபட்டனர். மோதிரமலையில் யானை கூட்டம் புகுந்து அட்டகாசம் செய்த சம்பவம் அப்பகுதி மக்கள் இடையே பரபரப்பை ஏற்படுத்தியது.

# சிந்து நதி ஒப்பந்தம் நிறுத்தி வைப்பு விவகாரம்: இந்தியாவுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து 4 கடிதம்




புதுடெல்லி, ஜூன்.09-
சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யக் கோரி இந்தியாவுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து 4 முறை கடிதம் அனுப்பியுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி தீவிரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலை தொடர்ந்து இந்தியா பாகிஸ்தான் இடையிலான சிந்து நதி நீர் பகிர்வு ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாக இந்தியா அறிவித்தது. இதற்கு பாகிஸ்தான் எதிர்ப்பு தெரிவித்தாலும் அதனை இந்தியா பொருட்படுத்தவில்லை. பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ் தானுக்கு எதிராக ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்கிடையில் சிந்து நதி ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்பட்டதால் தண்ணீர் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள பாகிஸ்தான் மிகுந்த ஏமாற்றமும் கவலையும் அடைந்துள்ளது. இந்நிலை யில் சிந்து நதி விவகாரத்தில் இந்தியா தனது முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கோரி பாகிஸ்தான் இதுவரை 4 கடிதங்களை எழுதியுள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு வட்டாரங்கள் கூறியதாவது: சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை மீண்டும் செயல்படுத்த கோரி மத்திய ஜல்சக்தி அமைச்சகத்துக்கு பாகிஸ்தான் நீர்வள அமைச்சக செயலாளர் சையது அலி முர்தாசா இதுவரை 4 கடிதங்களை அனுப்பியுள்ளார். இந்த கடிதங்கள் வெளியுறவு அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கைக்கு பிறகும் பாகிஸ்தானிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது.


தீவிரவாதமும் வர்த்தகமும் ஒரே நேரத்தில் நடைபெற முடியாது, ரத்தமும் தண்ணீரும் ஒன்றாகப் பாய முடியாது என்று இந்தியா தெளிவாகக் கூறியுள்ளது. சிந்து நதி நீர் ஒப்பந்தம் நல்லெண்ணம் மற்றும் நட்புறவில் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. ஆனால் அந்த உணர்வுகளுக்கு எதிராக பாகிஸ்தான் செயல்பட்டு வந்தது.

எனவே எல்லை தாண்டிய தீவிரவாதத்துக்கான ஆதரவை நிறுத்துவதுடன் தீவிரவாதத்துக்கு எதிராக உறுதியான மற்றும் நம்பத்தகுந்த நடவடிக்கைகளை பாகிஸ்தான் எடுக்கும் வரை சிந்து நீதி ஒப்ந்தம் நிறுத்தி வைக்கப்படும் என்று இந்தியா தெளிவுபடுத்தியுள்ளது. இவ்வாறு மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

சிந்து நதி ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்பட்டதை தொடர்ந்து அப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணுமாறு பாகிஸ் தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீபிடம் அந்நாட்டு அரசியல் தலைவர்கள் வலியுறுத்தினர்.

இது தொடர்பாக பாகிஸ்தான் எம்.பி. சையலி அலி ஜாபர் கடந்த மாதம் கூறுகையில், “இப்போது ஏற்பட்டுள்ள தண்ணீர் நெருக்கடிக்கு தீர்வு காணாவிட்டால் நாம் பட்டினியால் சாக நேரிடும். சிந்து நதி படுகை நமது உயிர்நாடியாக உள்ளது. ஏனெனில் நமது தண்ணீரில் நான்கில் மூன்று பங்கு நாட்டுக்கு வெளியில் இருந்து வருகிறது. 10ல் 9 பேர் தங்கள் வாழ்க்கைக்கு சிந்து நதி படுகையை நம்பியுள்ளனர். நமது பயிர்களில் 90 சதவீதம் இந்த தண்ணீரை நம்பியுள்ளன. மேலும் அனைத்து மின் திட்டங்களும் அணைகளும் சிந்து நதி மீது கட்டப்பட்டுள்ளன” என்றார்.

பாகிஸ்தான் தலைவர்களின் இந்த வற்புறுத்தலை தொடர்ந்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் முன்வந்தது குறிப்பிடத்தக்கது.




# ஆந்திராவில் 143 ஏக்கர் பரப்பளவில் அமைகிறது கூகுள் அலுவலகம்

ஆந்திரா, ஜூன்.09-
ஆந்திராவில் 143 ஏக்கர் பரப்பளவில் கூகுள் நிறுவன அலுவலகம் அமைய உள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா விரைவில் நடைபெற உள்ளது.

ஆந்திராவின் தலைநகரான அமராவதியில் அனந்தவரம்நெக்கள்ளு சாலையில் அலுவலகத்தை நிறுவ கூகுள் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதற்காக, இ8 சாலையில் சர்வே எண் 10, 11, 12 மற்றும் 13 ஆகிய நிலப்பரப்பில் சர்வே நடைபெற்றது. இதில் 143 ஏக்கர் நிலம் கூகுள் நிறுவனத்துக்கு வழங்க ஆந்திர அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக வெள்ளிக்கிழமை மாலை கூகுள் நிறுவன அதிகாரிகள், ஆந்திர அரசு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி தங்களின் ஒப்புதலை தெரிவித்துள்ளனர்.

விமான நிலையம், ரயில் நிலையம் ஆகியவை இந்த இடத்துக்கு அருகில் வர உள்ளதால், ஆந்திர அரசு வழங்குவதாக தெரிவித்த நிலத்தை பார்த்தவுடன் கூகுள் நிறுவன அதிகாரிகள் ஒப்புதல் தெரிவித்துள்ளனர். விரைவில் இங்கு இதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற உள்ளதாக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 4 நாட்களில் 6 லட்சம் பேர் அரசு பேருந்துகளில் பயணம்: அரசுப் போக்குவரத்துக் கழகம் தகவல்

சென்னை, ஜூன்.09-
ஜூன் 4 முதல் ஜூன் 8 வரை இயக்கப்பட்ட 11,026 பேருந்துகளில் 6,06,430 பயணிகள் பயணித்துள்ளனர் என அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் ஆர். மோகன் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின் சார்பில், முகூர்த்தம், பக்ரீத் பண்டிகை மற்றும் வார விடுமுறையை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டது. சனிக்கிழமை பக்ரீத் பண்டிகைக் கொண்டாடப்பட்டதால், வியாழக்கிழமை இரவு முதலே ஏராளமானோர் சென்னையிலிருந்து வெளியூர்களுக்குச் செல்ல தொடங்கியிருந்தனர்.

இந்நிலையில் ஜூன் 4 முதல் ஜூன் 8 வரை இயக்கப்பட்ட 11,026 பேருந்துகளில் 6,06,430 பயணிகள் பயணித்துள்ளனர் என அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் ஆர். மோகன் தெரிவித்துள்ளார். நேற்று நள்ளிரவு 24.00 மணி நிலவரப்படியும் மற்றும் இன்று அதிகாலை 02.00 மணி வரை சென்னையிலிருந்து வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையான 2,092 பேருந்துகளில் 2,092 பேருந்துகளும், 936 சிறப்புப் பேருந்துகளும் ஆக 3,028 பேருந்துகளில் 1,66,540 பயணிகள் பயணம் செய்துள்ளனர். ஜூன் 4 முதல் ஜூன் 8 வரை இயக்கப்பட்ட 11,026 அரசு பேருந்துகளில் 6,06,430 பயணிகள் பயணித்துள்ளனர்.

**மாலை தந்தி நாளிதழுக்கு**

விருதுநகர், திருநெல்வேலி தென்காசி, கரூர், சேலம், கோவை நாமக்கல், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி தர்மபுரி, திருப்பத்தூர், கடலூர் ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களுக்கு மாவட்ட செய்தியாளர்கள் மாவட்ட புகைப்பட கலைஞர்கள் தாலுகா செய்தியாளர்கள் தேவை.

**95 85 32 31 32, 944 35 71 71 9**



# பொள்ளாச்சி சுற்று வட்டாரத்தில் மானாவாரி, காய்கறி சாகுபடியை அதிகரிக்க தயாராகும் விவசாயிகள்

பொள்ளாச்சி, ஜூன்.09-
பொள்ளாச்சி சுற்று வட்டார கிராமங்களில் தென்னைக்கு அடுத்தப்படியாக மானாவாரி பயிர்களான மக்காசோளம், நிலக்கடலை, தட்டைப்பயிர் உள்ளிட்டவை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சித்திரை, ஆடி மற்றும் தை பட்டத்தை எதிர்நோக்கி பயிர்கள் விதைக்கப்பட்டு குறிப்பிட்ட நாட்களில் அறுவடை செய்யப்படுகிறது. இந்த ஆண்டு துவக்கத்திலிருந்து வெயிலின் தாக்கம் அதிகளவில் இருந்ததால், மானாவாரி பயிரிட விவசாயிகள் கோடை மழையை எதிர்நோக்கி இருந்தனர். கடந்த மாதம் சில நாட்களில் குறிப்பிட்ட சில மணி நேரம் கோடை மழை பெய்தது. அதன்பின் போதிய மழை இல்லாமல் இருந்தாலும், அண்மையில் கோடை வெயிலின் தாக்கம் மறைந்து பருவமழை துவங்கியது.

இதையடுத்து, விவசாயிகள் பலர் தங்கள் விளைநிலங்களில் மானாவாரி பயிர் மற்றும் காய்கறி சாகுபடியை அதிகரிக்க செய்ய துவங்கியுள்ளனர். இதில் அதிகபடியாக நிலக்கடலை மற்றும் மக்காசோளம் விதைப்பு பணியை மேற்கொள்கின்றனர். சுற்று வட்டாரத்தில் கோவிந்தனூர், சமத்தூர், பொன்னாபுரம், வடக்கிபாளையம், சூலக்கல், ராசக்காபாளையம், கோமங்கலம்புதூர், முத்தூர், நல்லிகவுண்டன்பாளையம், கோட்டூர் உள்ளிட்ட பல கிராமங்களில் விவசாயிகள் மானாவாரி பயிர்களை பயிரிட தங்கள் விளை நிலங்களில் ஏர் உழுது சீர்படுத்தியுள்ளனர். தற்போது பெய்யும் பருவமழையால், சாகுபடி செய்யப்படும் பயிர்கள் தளைக்க ஏதுவாக இருக்கும் என்று விவசாயிகள் பலர் கருத்து தெரிவித்தனர்.

# தரமணி வேதியியல் தொழில் நுட்ப பயிலகத்தில் மாணவர்கள் சேர்க்கை: அரசின் அனைத்து சலுகைகளும் வழங்கப்படும்




சென்னை, ஜூன்.09-
சென்னை தரமணி வேதியியல் தொழில் நுட்ப பயிலகத்தில் முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் தொழில் நுட்ப கல்வித்துறையின் தரமணி வேதியியல் தொழில் நுட்பப் பயிலகம் வெளியிட்ட அறிவிப்பு:

சென்னை தரமணியில் உள்ள வேதியியல் தொழில் நுட்ப பயிலகம் 100% உத்திரவாதத்துடன் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிக சம்பளத்துடன் வேலை வாய்ப்பை தரக்கூடிய பட்டயப்படிப்பினை வழங்கி கொண்டிருக்கிறது. இந்த பயிலகத்தில் முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர் சேர்க்கை தொடங்கி உள்ளது. இங்கு டிப்ளமோ இன் கெமிக்கல் இன்ஜினியரிங், டிப்ளமோ இன் பாலிமர் டெக்னாலஜி மற்றும் டிப்ளமோ இன் பெட்ரோ கெமிக்கல் இன்ஜினியரிங் ஆகிய மூன்று பாடப்பிரிவில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இப்பாடப்பிரிவுகளுக்கு பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதியில் தேர்ச்சி பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். ஷ்ஷ்ஷ்.மீஸிஜீஷ்ரீஹ்.வீஸீ என்ற இணையதள வாயிலாக விண்ணப்பங்கள் பதிவு செய்ய வேண்டும். பதிவுக் கட்டணமான ரூ.150ஐ விண்ணப்பதாரர் டெபிட்கார்டு, கிரிடிட் கார்டு, நெட் பேங்கிங் இணையதளம் வாயிலாக செலுத்தலாம். எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு பதிவுக்கட்டணம் செலுத்த அவசியமில்லை.

கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் அனைத்து சலுகைகளான இலவச பேருந்து வசதி, கல்வி உதவி தொகை, புதுமைப் பெண் திட்டம், பிரகதி உதவி தொகை, தமிழ்ப் புதல்வன் உதவிதொகை போன்ற பல திட்டங்கள் வழங்கப்படுகிறது. உடல் ஊனமுற்றவர்களுக்கு மின் தூக்கி(லிப்ட்) வசதி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி வழங்கப்பட்டு வருகிறது. மாணவர்கள் உடனடியாக இக்கல்லூரியில் சேர்ந்து பயனடையலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# குரூப் 2, 2ஏ பதவிக்கான தேர்வு தேர்வர்கள் சரியான சான்றிதழை பதிவேற்றம் செய்ய அவகாசம்: டிஎன்பிஎஸ்சி செயலாளர் அறிவிப்பு

சென்னை, ஜூன்.09-

குரூப் 2, 2ஏ பதவிக்கான தேர்வில் தேர்வர்கள் சரியான சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய வருகிற 15ம் தேதி வரை கால அவகாசம் வழங்கி டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) செயலாளர் கோபால சுந்தர ராஜ் வெளியிட்ட அறிவிப்பு: தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக குரூப் 2 மற்றும் குரூப் 2ஏ பணிகள் உள்ள பதவிகளுக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கு தேர்வர்களால் சான்றிதழ் பதிவேற்றம் செய்யப்பட்டது. சான்றிதழ் சரிபார்ப்பிற்கு பின்னர் சில தேர்வர்கள் உரிய சான்றிதழ்களை குறைபாடாக, சரியாக பதிவேற்றம் செய்யப்படாமல் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, இத்தகைய தேர்வர்களுக்கு இறுதி வாய்ப்பு வழங்கும் விதமாக வருகிற 15ம் தேதி இரவு 11.59 மணி வரை விடுபட்ட மற்றும் சரியான சான்றிதழ்களை மறுபதிவேற்றம் செய்ய வாய்ப்பு வழங்கப்படுகிறது. இத்தகவல் அத்தேர்வர்களுக்கு மட்டும் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, அத்தேர்வர்கள் அனைவரும் மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ள சான்றிதழ்களை தேர்வாணைய இணையதளத்தில் ஒருமுறைப் பதிவு தளம் வாயிலாக பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள். அவ்வாறு உரிய சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யாத தேர்வர்களின் உரிமை கோரல், விண்ணப்பம் நிராகரிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# வேதாரண்யத்தில் 9,000 ஏக்கரில் உப்பு உற்பத்தி மும்முரம்

வேதாரண்யம், ஜூன்.09-

வேதாரண்யத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்ததால் 9000 ஏக்கரில் உப்பு உற்பத்தி தீவிரமடைந்துள்ளது. நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் அகஸ்தியன்பள்ளி, கோடியக்காடு, கடிநெல்வயல் உள்ளிட்ட பகுதியில் 9,000 ஏக்கரில் உப்பு உற்பத்தி நடந்து வருகிறது. தமிழ்நாட்டில் தூத்துக்குடிக்கு அடுத்தபடியாக உப்பு உற்பத்தியில் வேதாரண்யம் இரண்டாமிடம் வகிக்கிறது. இத்தொழிலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் 10 ஆயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். வேதாரண்யத்தில் ஆண்டுக்கு 6 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி நடந்து வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பு தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் ஆந்திரா, கேரளா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும் நாள்தோறும் அனுப்பி வைக்கப்படுகிறது.

கடந்த மாதம் பருவம் தவறி பெய்த பலத்த மழையால் உப்பங்களில் மழைநீர் தேங்கி நின்றதால் உப்பு உற்பத்தி துவங்கியது. இதனால் 9000 ஏக்கரில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதையடுத்து உப்பளங்களில் தேங்கியிருந்த மழைநீரை அகற்றும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர். கடந்த ஒரு வாரமாக வெயில் அடித்து வருவதால் உப்பு உற்பத்தி துவங்கி மும்முரமாக நடந்து வருகிறது. உப்பு உற்பத்தியில் ஆண், பெண் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கானோர் இரவு பகலாக ஈடுபட்டு வருகின்றனர். மேலும் உற்பத்தி செய்து சேமித்து வைத்திருந்த உப்பை விற்பனைக்காக வெளியூர்களுக்கு லாரிகளில் அனுப்பும் பணியும் நடந்து வருகிறது.

தற்போது ஒரு டன் உப்பு ரூ.2,000 ரூ.2,500 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதுகுறித்து உப்பு உற்பத்தியாளர்கள் கூறுகையில், ஒவ்வொரு ஆண்டும் 6 லட்சம் மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்யப்படும். கடந்த மாதம் பருவம் தவறி பெய்த மழையால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது. தற்போது வெயில் அடித்து உப்பு உற்பத்தி மும்முரமாக நடந்து வந்தாலும் இந்தாண்டு உற்பத்தி இலக்கான 6 லட்சம் இலக்கை எட்டுவது கடினம் தான் என்றனர்.

# தமிழ்நாடு முதல்வரை பார்த்துதான் ஒன்றிய அரசு பதற்றத்தில் உள்ளது: அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி

பெரம்பூர், ஜூன்.09-

தமிழ்நாடு முதலமைச்சரை பார்த்து தான் ஒன்றியமே இன்று பதற்றத்தில் உள்ளது என்பதற்கு அமித்ஷாவின் வருகையே ஒரு எடுத்துக்காட்டு என புளியந்தோப்பில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறியுள்ளார். சென்னை சூளையில் உள்ள அகண்ட தண்டு மாரியம்மன் கோயில் மற்றும் பட்டாளத்தில் உள்ள 40 ஆண்டு பழமையான சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் குடமுழுக்கு விழா இன்று நடைபெற்றது.



இதில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்த பிறகு நிருபர்களை சந்தித்து கூறியதாவது:

திமுக ஆட்சி அமைந்து 3000க்கும் மேற்பட்ட கோயில்களில் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. திராவிட மாடல் ஆட்சி அமைந்து இதுவரை 117 முருகன் கோயில்களில் குடமுழுக்கு நடந்துள்ளது. இதுவரை 7,597.77 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளது. அதனுடைய மதிப்பு 7,683 கோடி ரூபாய் ஆகும். திமுக ஆட்சி அமைந்து மொத்தம் 6,306 கோடி ரூபாய் மதிப்பில் 26,300 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் இவ்வளவு பணி மேற்கொள்வது திராவிட மாடல் ஆட்சியில்தான். ஒன்றியத்தில் சிறப்பாக செயல்படும் மாநிலம் என்றால் அது தமிழ்நாடுதான். அமித்ஷா வருகை திமுகவிற்கு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர், பதற்றமோ, பயமோ திமுக ஆட்சிக்கு இல்லை. திமுக கூட்டணி வலுவாக தெளிவாக உள்ளது. பதற்றம் பாஜகவிடம் இருப்பதால்தான் அவ்வப்போது முக்கிய புள்ளிகள் தமிழ்நாட்டுக்கு வரும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சரை பார்த்துதான் ஒன்றியமே இன்று பதற்றத்தில் உள்ளது என்பதற்கு அமித்ஷாவின் வருகையே ஒரு எடுத்துக்காட்டு.

இந்து சமய அறநிலைத்துறை சார்பில் நடத்தப்படும் முருகர் மாநாடுதான் பக்தி மாநாடு. அவர்கள் நடத்தக்கூடியது அரசியல் கட்சி சார்பில் நடத்தப்படும் முருகன் மாநாடு. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதீஸ்வரர் கோயில் குடமுழுக்கை செய்வது என்பது சற்று சவாலான பணி ஏனென்றால், ராஜகோபுரம் சற்று விரிசல் ஏற்பட்டு இருக்கக்கூடிய நிலையில் உள்ளது. இதை சரி செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திறனற்ற ஆட்சிக்கு ஒரு திட்டத்தை சாட்சியாக வைக்கவேண்டுமென்றால் கடந்த கால எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் நடந்த ஆட்சிக்கு கிளாம்பாக் கம்தான் சாட்சி. திட்டமிடல் இல்லாததால் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை வடிவமைத்ததன் காரணமாக அதிமுக ஆட்சி காலத்தில் செப்பனிட முடியவில்லை. கிளாம்பாக்கத்தில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற வடிகாலைகூட அதிமுக ஆட்சியில் அமைக்கவில்லை.

அதிமுக ஆட்சியில் கிளாம்பாக்கத்தில் இருந்து வெளியேறும் பயணிகளுக்கான வழி மார்க்கங்கள், ரயில் நிலையங்கள்கூட அமைக்கப்படவில்லை. அங்கிருந்த பூங்காக்களை மேம்படுத்தவில்லை. முடங்கிக்கிடந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை சரி செய்து மக்கள் பயன் பாட்டிற்கு கொண்டு வந்தவர் நம்முடைய முதலமைச்சர். சில தினங்களுக்கு முன்பு பயணிகள் அதிகளவில் குவிந்ததால், தேவையான பேருந்துகளை ஏற்பாடு செய்து பயணிகளின் திட்டமிட்ட பயணத்தை நிறைவேற்றி யுள்ளோம், திமுக ஆட்சியில் எந்தவிதமான தவறில்லை என்பதால் போக்குவரத்துதுறை சார்பிலும் அரசின் சார்பிலும் விரிவாக விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. தேவையான அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டது, ஒரு மணி நேரத்திற்குள்ளாக அனைத்தையும் சரி செய்து பயணிகளின் பயணத்தை இனிதாக்கிய அரசு எங்களுடைய அரசு. கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தின் வெற்றியை தாங்கிக்கொள்ள முடியாதவர்கள் இதுபோன்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கத்தான் செய்வார்கள். இவ்வாறு அமைச்சர் கூறியுள்ளார்.

# ஆரணியில் விபத்து தடுக்க சென்டர்மீடியனுக்கு பெயிண்ட் அடிக்கும் பணி விறுவிறுப்பு

ஆரணி, ஜூன்.09-

ஆரணி நெடுஞ்சாலை துறை உட்கோட்ட பிரதான சாலையான ஆரணி டவுன், ஆற்காடுவிழுப்புரம் நெடுஞ்சாலை ஆகிய பகுதிகளில் தினசரி போக்குவரத்து அதிகரித்து வருகிறது. விபத்து தடுக்க சாலையின் நடுவே சென்டர்மீடியன்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவற்றில் விளம்பர போஸ்டர்கள், நோட்டீசுகள் உள்ளிட்டவை அதிகளவில் ஒட்டப்பட்டுள்ளது. இதனால் இரவில் ரிப்ளக்டர்கள் தெரியாததால் சென்டர்மீடியன் மீது வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளாகிறது.

எனவே சென்டர்மீனியனில் ஒட்டப்பட்ட நோட்டீசுகளை அகற்றி சுத்தம் செய்து கருப்பு, வெள்ளை நிற பெயிண்ட் பூசவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனையேற்று நெடுஞ்சாலை துறை உதவி கோட்டபொறியாளர் நாராயணன் உத்தரவின்பேரில் ஆற்காடுவிழுப்புரம் நெடுஞ்சாலைகளில் உள்ள ஆரணி டவுன் காந்திசாலை, எஸ்எம் ரோடு, அண்ணாசிலை பகுதி, இரும்பேடு சாலை, சேத்துப்பட்டு சாலைகளில் உள்ள சென்டர்மீடியன்களில் கருப்பு, வெள்ளை அடிக்கும் பணிகள் தொடங்கி விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இதனை நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் நாராயணன் நேற்று ஆய்வு செய்தார். அப்போது பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.



# திண்டுக்கல் சிறுமலைப் பகுதியை சுற்றுலா தலமாக்க முயற்சி

திண்டுக்கல், ஜூன்.09-

திண்டுக்கல் அருகேயுள்ள சிறுமலை மலைப்பகுதியை சுற்றுலாத் தலமாக்கும் முயற்சியில் சுற்றுலாத் துறை இறங்கியுள்ளது. ஏற்கனவே ரூ.5 கோடி செலவில் அமைக்கப்பட்ட பல்லுயிர் பூங்கா பயன்பாட்டுக்கு திறக்கப்படாமல் 5 ஆண்டுகளாக உள்ள நிலையில், மீண்டும் ரூ.10 கோடி செலவில் பல்வேறு சுற்றுலா திட்டங்களை செயல்படுத்த முன்னெடுத்துள்ளது பலனிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மலைகளின் இளவரசி என அழைக்கப்படும் நிலையில், திண்டுக்கல் அருகேயுள்ள சிறுமலை மலைகளின் சிற்றரசி என அழைக்கப்படும் வகையில் சுற்றுலாப் பயணிகளை கவர பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனுமன் இலங்கைக்கு சஞ்சீவி மலையை தூக்கிச் செல்லும் வழியில், அதில் இருந்து ஒரு பகுதி கீழே விழுந்தது. இதுவே சிறுமலை என அழைக்கப்படுவதாக புராணங்களில் கூறப்படுகிறது. இதனால் மூலிகைகள் நிறைந்த மலையாக சிறுமலை காணப்படுகிறது.

சிறுமலையில் காட்டுமாடுகள், கடமான், குரங்குகள் உள்ளிட்ட பல்வேறு வனவிலங்குகள் உள்ளன. அடர்ந்து நீண்ட வனப்பகுதியாக உள்ளது. திண்டுக்கல் அருகே தொடங்கி மாவட்ட எல்லையான வாடிப்பட்டி வரை சிறுமலை நீண்டுள்ளது. இன்னமும் பழங்குடியினர் தங்கள் பழமை மாறாமல் சிறுமலை வனப்பகுதியில் வசித்து வருகின்றனர். இங்கு காபி, மிளகு, சவ்சவ் உள்ளிட்ட மலை விவசாயமும் நடைபெற்று வருகிறது. இதனால் இயற்கை எழில் மாறாமல் உள்ள சிறுமலையை சுற்றுலாத்தலமாக்கினால் செயற்கைத்தன்மையுடன் மாறிவிடும் என்ற அச்சமும் இயற்கை, வன அலுவலர்களிடம் உள்ளது.

கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு திண்டுக்கல் ஆட்சியராக டி.ஜி.வினய் இருந்தபோது, சிறுமலையை சுற்றுலாத்தமாக்க முயற்சி மேற்கொள்ளப் பட்டு சிறுமலை பகுதியில் சுற்றுலாத் துறையினருடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்கு வாட்சிங் டவர் அமைப்பது, குழந்தைகளுக்கு விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய பொழுதுபோக்கு பூங்கா அமைப்பது, அங்குள்ள சிறிய குளத்தில் படகு சவாரிக்கு ஏற்பாடு செய்வது என பரிசீலிக்கப்பட்டது.

இதற்கிடையில் வனத்துறை சார்பில் கடந்த ஆட்சியில் சிறுமலையில் ரூ.5 கோடி செலவில் பல்லுயிர் பூங்கா அமைக்கப்பட்டது. சிறுமலைக்கு செல்பவர்கள் இந்த பூங்காவை பார்த்துவிட்டு செல்லாம் என ஆர்வமுடன் அங்கு சென்றால், பணிகள் முடிந்து 5 ஆண்டுகளாகியும் மக்கள் பார்வைக்கு திறக்கப்படாமல் பூட்டியே கிடக்கிறது. இப்பூங்காவில் பட்டாம்பூச்சி பூங்கா, வனவிலங்குகள் குறித்த அரிய தகவல்கள் அடங்கிய கண்காட்சி அரங்கம் உள்ளிட்டவை சிறப்பாக செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இதை பராமரிக்க பணியாட்கள் இல்லாததால் இந்த பல்லுயிர் பூங்கா திறக்கப்படாமல் இருப்பதாக வனத்துறையினர் தெரிவிக்கின்றனர். சிறுமலை சுற்றுலாவின் முகமாக பல்லுயிர் பூங்கா அமைக்கப்பட்டும் திறக்கப்படாமல் வீணாக உள்ளது. இந்நிலையில் கடந்த மாதம் சிறுமலையை சுற்றுலாத் தலமாக்கும் முயற்சி மீண்டும் தொடங்கி சுற்றுலாத் துறை சார்பில் அதன் அரசு செயலர் மணிவாசன் ஆய்வு மேற்கொண்டார். ரூ.10 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாப் பணிகள் மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

சிறுமலை கிராமத்தை சுற்றி சில மலை கிராமங்கள் உள்ளன. பட்டு வளர்ச்சித் துறை, தோட்டக்கலைத் துறை என அரசுக்கு சொந்தமான இடங்கள் உள்ளன. இவற்றில் பூங்கா அமைப்பது உள்ளிட்ட பணிகளை மேற்கொ ள்ளலாம். இங்குள்ள சாலைகள் குறுகியதாக உள்ளதால் அதிக வாகனங்கள் சிறுமலைக்கு செல்லும்பட்சத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே தேவையான போக்குவரத்துக் கட்டமைப்புகளையும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே ரூ.5 கோடி செலவழித்து பல்லுயிர் பூங்கா அமைத்து திறக்காமல் விட்டதை உடனடியாக பயன்ப ாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன் பின்னரே படிப்படியாக சுற்றுலாப் பயணிகளை கவரும் திட்டங்களை நிறைவேற்றி செயல்படுத்த வேண்டும் என்பதே சிறுமலை மலைகிராம மக்களின் கோரிக்கையாக உள்ளது.

# தேனிமலை முருகன்கோயிலுக்கு செல்ல 7 கி.மீ. தூரத்திற்கு ரூ.9.50 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் அமைப்பு

பொன்னமராவதி, ஜூன்.09-

பொன்னமராவதி அருகே உள்ள தேனிமலை முருகன் கோயில் முன்பு பொதுமக்கள் நன்கொடை மூலம் ரூ.9.50 லட்சம் மதிப்பில் பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியில் இருந்து புதுக்கோட்டை செல்லும் சாலையில் 7 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிறது தேனிமலை பசுமை நிறைந்த மலை கிராமம். இந்த ஊருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அங்கிருக்கும் தேன் கூடுகளைக் கொண்ட மலையில் அழகுற அமைந்துள்ள சுப்பிரமணியசுவாமி கோயில். மலையின் உச்சியில் உள்ள பெரிய தேன்கூடுகளில் கிராம மக்கள் தேனெடுப்பதோ, சேதம் ஏற்படுத்துவதோ இல்லை. மாறாக அது வழிபாட்டுக்கு உரியதாகவும், விவசாயிகளின் நம்பிக்கைக்கான சின்னமாகவும் இருந்து வருகிறது. அதன்படி, இந்த மலையில் மூன்று பெரிய தேன் கூடுகளை கட்டியிருந்தால் அந்த வருடம் விவசாயம் சிறப்பாக இருக்கும் என்றும், இரண்டு கூடுகளைக் கட்டியிருந்தால் விளைச்சல் சுமாராக இருக்கும் என்றும், ஒரே ஒரு கூடு மட்டும் கட்டியிருந்தால் போதிய விளைச்சல் இருக்காது என்றும் நம்புகின்றனர்.



அதன்படி, தேனீக்கள், தேன் கூடுகள், தேன்கூடு அமைந்திருக்கும் மலை ஆகியன இவ்வூர் மக்களின் வாழ்வோடும், உணர்வோடும் கலந்திருக்கின்றன. சிறப்பு வாய்ந்த தேன்மலையில் 200 படிகளை அமைத்து, உச்சியில் சுப்பிரமணியசுவாமிக்கு கோவில் கட்டப்பட்டுள்ளது. இங்கே சித்தர்கள் பலர் தங்கி இருந்து முருகனின் அருளைப் பெற்று, முக்தி அடைந்ததாகவும், அந்த சித்தர்கள் இன்றும் முருகனை தரிசித்து வருவதாகவும் நம்பிக்கை நிலவுகிறது. இங்கே பெருமானந்த சுவாமி என்ற சித்தரின் ஜீவ சமாதி இருக்கிறது. மலை அடிவாரம் அருகில் நீண்ட காலம் தங்கியிருந்து முருகனை வழிபட்டதாகவும், மக்களுக்கு அபிஷேகம் தீர்த்தம் வழங்கி நோய் தீர்க்க உதவி புரிந்ததாகவும் சொல்லப்படுகிறது. புதுக்கோட்டை மன்னர் வனப்பகுதிக்கு வேட்டையாட சென்றபோது, மன்னருக்கு திடீரென கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டது.

வலியால் துடித்த அவருக்கு வைத்தியம் பார்க்க வைத்தியர் யாரேனும் இருக்கிறார்களா? என்று உடன் வந்தவர்கள் தேடினர். அப்போது அங்கே ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவனிடம், இது குறித்து கேட்டபோது, இங்கு வைத்தியர் யாரும் இல்லை ஆனால் மருந்து இருக்கிறது என்று கூறினான். பின்னர், அருகில் இருக்கும் தேனி மலையை சுட்டிக்காட்டி, முருகன் அருள்புரியும் அந்த மலையில் இருக்கும் சுனை நீரை கொண்டு வந்து மன்னருக்கு கொடுத்தால் வயிற்று வலி நீங்கும் என கூறினான். அவ்வாறே செய்ய மன்னருக்கு வலி நீங்கியது. அதன் பின்னர் மன்னரின் ஆணைப்படி தேனிமலை முருகன் ஆலயம் கட்டப்பட்டது என்று கூறுகின்றனர். மலை உச்சியில் உள்ள கோயிலுக்கு செல்ல படிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலேவுள்ள கோயிலின் மகாமண்டபத்தில் மயில் வாகனமும், அர்த்த மண்டபத்தில், விநாயகர், சிவன், காசி விஸ்வநாதர், விசாலாட்சி, நந்தி மற்றும் நாகரும், கருவறையில் அமர்ந்த கோலத்தில் வள்ளி தெய்வானையுன் சுப்பிரமணிய சுவாமி கருணையின் வடிவாய் காட்சியளிக்கிறார்.

நோய்கள் நீங்கவும், மனக்குறைகள் விலகவும் இங்கே வழிபடுதல் சிறந்தது என்கின்றனர் மக்கள். இதனால், பொன்னமராவதி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த ஏராளமானோர் வந்து செல்கின்றனர். ஆனால், மலைக்கோயிலுக்கு செல்லும் சாலை குண்டும் குழியுமாக மோசமான நிலையில் இருந்ததால், பொதுமக்கள் ரூ.9.50 லட்சம் நன்கொடை அளித்து, பேவர் பிளாக் அமைத்துள்ளனர். இதனால், பொதுமக்கள் கோயிலுக்கு சிரமமின்றி சென்றுவர முடிவதால், மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும், மலையைச் சுற்றிலும் வலம் வர ஏதுவாக அரசு சார்பில் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# இளையான்குடியில் வட்ட சட்டப் பணிகள் குழுவின் சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா



இளையான்குடி, ஜூன்.09-

தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் செயல் திட்டப்படி சிவகங்கை மாவட்டம் சட்டப்பணிகள் ஆணைக் குழு மற்றும் இளையான்குடி வட்ட சட்டப் பணிகள் குழுவின் சார்பில் உலக சுற்றுச்சூழல் தின விழா கொண்டாடப் பட்டது. இவ்வுலவின் தொடர்ச்சியாக இளையான்குடி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் தலைவரும் முதன்மை மாவட்ட நீதிபதிமான கே.அறிவொளி தலைமையில் மரக்கன்றுகள் நடும் பணியை தொடங்கி வைத்தார். பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தாமல் பூமியை சுகாதாரத்தோடு வைத்துக் கொள்ளவும் காற்று மாசுபடுவதை தவிர்க்கவும் மரங்கள் வளர்த்து மழையை பெருக்கவும் வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்ற நடுவர் பசும்பொன் சண்முகையா, மாவட்ட சட்டப்பணிகள் ஆனைக்குழு செயலாளரும் சார்பு நீதிபதிமான ராதிகா இளைய ான்குடி வட்ட சட்டப்பணிகள் குழுத் தலைவரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதிமான மணிவர்மன் ஆகியோர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தனர். உடன் வழக்கறிஞர்கள் கல்யாணி, ஜான் சேவியர், முத்துச்சாமி, ரவிக்குமார், சத்தியேந்திரன், மாரிமுத்து, அமர்நாத், சுகன்யா, வேல்முருகன், பார்த்தசாரதி, பூ முருகன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ரமேஷ், இளையான்குடி காவல் சார்பு ஆய்வாளர் சிவசுப்பு, கண்ணாமணி, சாலை கிராமம் சார்பு ஆய்வாளர் சுரேஷ்குமார், இளையான்குடி துப்புரவு ஆய்வாளர் தங்கதுரை, சமூக ஆர்வலர் மாலிக், மாவட்ட சட்டப்பணிகள் முதுநிலை நிர்வாக உதவியாளர் பானுமதி ஆர்த்தி நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை இளையான்குடி சட்டப்பணிகள் குழு இளவரசன் தலைமையில் குழுவினர் செய்திருந்தனர்.



# சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தினக் கொண்டாட்டம்

கல்லல், ஜூன்.09-

சிவகங்கை மாவட்டம் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக மாணவர்களுக்கான ஓவியப் போட்டி நடைபெற்றது. இரண்டு பிரிவுகளாக நடந்த இப்போட்டியில் இளநிலைப் பிரிவில் ஸ்ரீ ஐங்கரன் சஞ்சய் முதலிடமும், கௌதம் இரண்டாம் இடமும், கவியரசன் மூன்றாம் இடமும், பிடித்தனர். உயர்நிலைப் பிரிவில் புவனேஷ் முதலிடமும், தேவதர்ஷன் இரண்டாம் இடமும் பிடித்தனர். ஓவியப்போட்டியின் நடுவராக இப்பள்ளியின் கலை ஆசிரியர் மாரிமுத்து செயல்பட்டார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பள்ளி தலைமை ஆசிரியர் அழகப்பன் பரிசுப் புத்தகம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். ஆசிரியர்கள் சந்தானகிருஷ்ணன், அண்ணாத்துரை, கற்பகவல்லி, அமுதா, ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். போட்டியைத் தொடர்ந்து மரக்கன்று நடும் நிகழ்ச்சியானது நடைபெற்றது. அறிவியல் இயக்க கிளை செயற்குழு உறுப்பினர்கள் விநாயகமூர்த்தி, மருதநாயகம் மாணவர்களுடன் இணைந்து மரக்கன்றுகளை நட்டனர் கல்லல் கிளையில் செயல்பட்டு வரும் விக்ரம் சாராபாய், முத்துலட்சுமி ரெட்டி மற்றும் சர் சி வி ராமன் துளிர் இல்லங்கள் சார்பாக நடைபெற்ற சுற்றுச்சூழல் தின விழாவில் இந்த அமைப்பின் சிவகங்கை மாவட்ட செயலாளர் ஆரோக் கியசாமி கலந்து கொண்டு மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் "சுற்றுச்சூழல் பாதுகாப்பு" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். கிளை பொறுப்பாளர்கள் நாகரத்தினம், சித்திரைச் செல்வி, தென்னரசி, மருதநாயகம், ரமணா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக மாணவ மாணவிகள் சுற்றுச்சூழல் தின உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். சிவகங்கை மாவட்ட பொருளாளர் பிரபு விழா விற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்தார்.

# மானாமதுரையில் மின் பயனிட்டார்கள் குறைதீர்க்கும் கூட்டம் 10ஆம் தேதி நடைபெறுகிறது

சிவகங்கை, ஜூன்.09-

சிவகங்கை மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் இரா.ரெஜினா குமாரி தலைமையில் மின் பயனீட்டாளர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற (10/06/2025) அன்று காலை 11.00 மணி முதல் 01.00 மணி வரை செயற்பொறியாளர்/பகிர்மானம் மானாமதுரை கோட்டத்தில் நடைபெறுவதால் மானாமதுரை கோட்டத்திற்குட்பட்ட மின் பயனீட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களின் மின்வாரியம் சம்மந்தமான குறைகளை தெரிவித்து செய்து கொள்ளுமாறு மானாமதுரை மின் செயற்பொறியாளர் ஜான்சன் தகவல் தெரிவித்துள்ளார்.



# 'நான் இங்கேயே இருந்து விடுகிறேன்' நெரிசலில் உயிரிழந்த மகனின் கல்லறையில் தந்தை உருக்கம்

ஹாசன், ஜூன்.09-

கடந்த புதன்கிழமை பெங்களூருவில் ஆர்சிபி அணியின் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 11 பேரில் பூமிக் லக்ஷ்மண் என்ற இளைஞரும் ஒருவர். அவரது கல்லறையில் இருந்து விலக மனமில்லாத அவரது தந்தை பி.டி.லக்ஷ்மண், 'நான் இங்கேயே இருந்து விடுகிறேன்' என கதறி அழுதது பலரையும் கலங்க செய்துள்ளது.

ஐபிஎல் 2025ம் ஆண்டு சீசனில் முதல் முறையாக ராயல் சாலஞ்சர்ஸ் பெங்களூரு அணி சாம்பியன் பட்டம் வென்றது. அந்த அணியின் வெற்றியை கொண்டாடும் வகையில் பெங்களூருவில் விதான சவுதா மற்றும் சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இதை காண லட்ச கணக்கான மக்கள் இரண்டு இடங்களிலும் குவிந்தனர்.

இதில் சின்னசாமி கிரிக்கெட் மைதானத்துக்கு வெளியில் இருந்து ஒரே நேரத்தில் மைதானத்துக்குள் மக்கள் நுழைய முயன்ற போது ஏற்பட்ட நெரிசலில் 11 பேர் உயிரிழந்தனர். இதில் மூன்று பேர் பதின்ம வயதினர் (டீன்ஏஜ்), 20 முதல் 35 வயது வரையிலான இளம் வயதினரும் இந்த நெரிசலில் உயிரிழந்தனர்.

இந்நிலையில், கர்நாடக மாநிலத்தின் ஹாசன் மாவட்டத்தில் கூட்ட நெரிசலில் உயிரிழந்த பூமிக் லக்ஷ்மணின் இறுதி சடங்கு நடைபெற்றது. அவருக்காக அவரது அப்பா பி.டி.லக்ஷ்மண் வாங்கிய நிலத்தில் பூமிக்கின் உடல் புதைக்கப்பட்டது.

"நான் இங்கிருந்து வேறு எங்கும் செல்ல விரும்பவில்லை. நான் இங்கேயே இருந்து விடுகிறேன். நான் எனது மகனுக்காக வாங்கிய இடத்தில் அவனது நினைவகம் எழுந்துள்ளது. எனது மகனுக்கு நடந்து வேறு யாருக்கும் நடக்க கூடாது. எனது நிலை எந்தவொரு தந்தைக்கும் வரக்கூடாது" என மகனின் கல்லறையை விட்டு விலக மனமின்றி பி.டி.லக்ஷ்மண் கதறி அழுதார். அவருக்கு உள்ளூர் மக்கள் ஆறுதல் சொல்லியும் தேற்ற முடியாத நிலை. இது வீடியோ காட்சியாக சமூக வலைதளத்தில் வெளியான நிலையில் கர்நாடக மாநிலத்தில் ஆளும் தரப்புக்கு அரசியல் ரீதியாக எதிர்க்கட்சிகள் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

# பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை மத்திய அரசு மறுவரையறை செய்துள்ளது: பிரதமர் மோடி



புதுடெல்லி, ஜூன்.09-

கடந்த 11 ஆண்டுகளில், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை மறுவரையறை செய்துள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "கடந்த 11 ஆண்டுகளில், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை மறுவரையறை செய்துள்ளது. தூய்மை இந்தியா மூலம் கண்ணியத்தை உறுதி செய்வதிலிருந்து ஜன் தன் கணக்குகள் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய நிதிச் சேவைகள் வரை பல்வேறு முயற்சிகள் மூலம், நமது பெண்கள் சக்தியை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

உஜ்வாலா திட்டம் பல வீடுகளுக்கு புகை இல்லாத சமையலறைகளைக் கொண்டு வந்த ஒரு மைல்கல் சாதனை. முத்ரா கடன்கள், லட்சக்கணக்கான பெண்கள் தொழில்முனைவோர்களாகவும், தங்கள் கனவுகளை சுதந்திரமாகத் தொடரவும் உதவியுள்ளன. பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் பெண்களின் பெயர்களில் வீடுகள் வழங்குவது அவர்களின் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெண் குழந்தையைப் பாதுகாப்பதற்கான ஒரு தேசிய இயக்கமாக, பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் உள்ளது. அறிவியல், கல்வி, விளையாட்டு, புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் ஆயுதப்படைகள் உட்பட அனைத்துத் துறைகளிலும் பெண்கள் சிறந்து விளங்கி பலரை ஊக்குவித்து வருகின்றனர்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவில் கரோனா பாதிப்பு 6 ஆயிரத்தை நெருங்குகிறது



புதுடெல்லி, ஜூன்.09-

இந்தியாவில் கரோனா பரவல் அதிகரித்து வரும் வேளையில் கரோனா நோயாளிகளின் எண்ணிக்கை 6 ஆயிரத்தை நெருங்குகிறது. இதில் கேரளா மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தற்போது மீண்டும் கரோனா வைரஸ் பரவி வருகிறது. இதற்கு உருமாற்றம் பெற்ற எல்எப்.7, எக்ஸ்எப்ஜி, ஜேஎன்.1 ஆகிய புதிய வைரஸ்களும் சமீபத்தில் அடையாளம் காணப்பட்ட என்பி.1.8.1 என்ற துணை திரிபும் காரணமாக உள்ளது.

இந்நிலையில் மத்திய சுகாதார அமைச்சக புள்ளிவிவரப்படி நேற்று காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில் புதிதாக 391 பேருக்கு கரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. சிகிச்சையில் இருப்போர் எண்ணிக்கை 5,755 ஆக உயர்ந்துள்ளது.

கரோனா வைரஸால் மிகவும் பாதிக்கப்பட்ட மாநிலமாக கேரளா உள்ளது. இங்கு 1,806 பேர் சிகிச்சையில் உள்ளனர். இதையடுத்து குஜராத் 717, டெல்லி 665, மேற்கு வங்கம் 622, மகாராஷ்டிரா 577, கர்நாடகா 444, உ.பி. 208, தமிழ்நாடு 194, புதுச்சேரி 13, ஹரியானா 87, ஆந்திரா 72, ம.பி 32, கோவா 9 என்ற எண்ணிக்கையில் நோயாளிகள் சிகிச்சையில் உள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில் ம.பி.யில் 45 வயது பெண்மணி, தமிழ்நாட்டில் 79 வயது முதியர் உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

தற்போது பரவும் கரோனா வைரஸ் தீவிர பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்று ஐசிஎம்ஆர் தலைவர் ராஜீவ் பெஹல் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், "தொற்று அதிகரிக்கும் போதெல்லாம், அது எவ்வாறு பரவுகிறது, எவ்வளவு வேகமாக பரவுகிறது என்பதை நாங்கள் கவனத்தில் கொள்கிறோம். இதற்கு முன் 2 நாட்களில் கரோனா பாதிப்பு இரட்டிப்பானதை நாங்கள் பார்த்துள்ளோம். ஆனால் இம்முறை கரோனா தொற்று வேகமாகப் பரவவில்லை" என்றார்.

# திண்டுக்கல்லில் மதுவிலக்கு காவல்துறையினர் திடீர் சோதனை



திண்டுக்கல், ஜூன்.09-

திண்டுக்கல் மதுவிலக்கு அமலாக்க பிரிவு டிஎஸ்பி. முருகன் தலைமையில் காவல் ஆய்வாளர் லாவண்யா காவலர்கள் மற்றும் மத்திய நுண்ணறிவு பிரிவு மணிகண்டன். கதிரவன் உள்ளிட்ட போலீசார் இணைந்து திண்டுக்கல்லில் உள்ள சர்ஜிகல் கடைகள் மற்றும் சயின்டிபிக் சப்ளையர்ஸ் கடைகளில் உரிமம் இல்லாமல் எத்தனால் மற்றும் மெத்தனால் வேதிப்பொருட்கள் விற்பனை செய்யப் படுகிறதா என திடீர் சோதனை நடத்தினர். மேலும் திண்டுக்கல் மதுவிலக்கு போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். எத்தனால் மற்றும் மெத்தனால் ஆகியவற்றை எந்தவித உரிமம் இன்றி கள்ளத்தனமாக வைத்திருந்தாலோ அல்லது விற்பனை செய்தாலோ கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மதுவிலக்கு போலீசார் எச்சரிக்கை செய்தனர்

# ஜூன் முதல் டிசம்பர் மாதத்துக்குள் 10 போர்க் கப்பல்கள் கடற்படையில் இணைப்பு



ஜூன் முதல் டிசம்பர் மாதத்துக்குள் 10 போர்க்கப்பல்கள் கடற்படையில் இணைக்கப்பட உள்ளன.

இந்திய கடற்படையில் 135க்கும் மேற்பட்ட போர்க்கப்பல்கள் உள்ளன. இதில் ஐஎன்எஸ் விக்ரமாதித்யா, ஐஎன்எஸ் விக்ராந்த் ஆகியவை விமானந்தாங்கி போர்க்கப்பல்கள் ஆகும். 20 நீர்மூழ்கிகளும் கடற்படையில் உள்ளன. வரும் 2030ம் ஆண்டில் இந்திய போர்க்கப்பல்களின் எண்ணிக்கையை 160 ஆக அதிகரிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. வரும் 2035ம் ஆண்டில் இந்த எண்ணிக்கையை 200 ஆக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

இந்திய கடற்படைக்காக 3வது விமானந்தாங்கி போர்க்கப்பலை தயாரிக்கும் பணி கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஐஎன்எஸ் விஷால் என பெயரிடப்பட்டு உள்ள இந்த போர்க்கப்பல் வரும் 2030ம் ஆண்டில் கடற்படையில் இணையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில் நடப்பு ஜூன் மாதம் முதல் டிசம்பர் மாதத்துக்குள் 10 புதிய போர்க்கப்பல்கள் கடற்படையில் இணைக்கப்பட உள்ளன. முதல்கட்டமாக வரும் 18ம் தேதி ஐஎன்எஸ் அர்னாலா கடற்படையில் இணைகிறது. இது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட போர்க்கப்பல் ஆகும். நீர்மூழ்கிகளை தாக்கி அழிக்கும் திறன் கொண்டது. இதே வகையை சேர்ந்த மேலும் 2 போர்க்கப்பல்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் கடற்படையில் இணைக்கப்பட உள்ளன.

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட ஐஎன்எஸ் தமால் போர்க்கப்பல் இந்த மாத இறுதியில் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட உள்ளது. இதுவும் விரைவில் கடற்படையில் இணைக்கப்பட உள்ளது. மேலும் நீலகிரி வகையை சேர்ந்த போர்க்கப்பல் நடப்பாண்டு இறுதிக்குள் கடற்படையில் சேர்க்கப்பட உள்ளது.

இதுதொடர்பாக கடற்படை வட்டாரங்கள் கூறும்போது, "அமெரிக்கா, பிரிட்டன், சீனா, ரஷ்யா, பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட நாடுகளில் மட்டுமே விமானந்தாங்கி போர்க்கப்பல்கள் தயாரிக்கப்படுகின்றன. ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க்கப்பல் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டதன் மூலம் இந்த பட்டியலில் இந்தியாவும் இணைந்திருக்கிறது. அடுத்த சில ஆண்டுகளில் சுமார் 88 போர்க்கப்பல்கள் இந்திய கடற்படையில் இணைக்கப்பட உள்ளன. முதல்கட்டமாக வரும் டிசம்பர் மாதத்துக்குள் 10 போர்க்கப்பல்கள் கடற்படையில் இணைகின்றன" என்று தெரிவித்தன.

# பெரியாறு அணையில் தண்ணீர் திறப்பு எதிரொலி: நாற்றங்கால் பாவும் பணியில் விவசாயிகள் தீவிரம்



சின்னமனூர், ஜூன்.09-

சின்னமனூரில் முதல் போகம் நெல் நடவு பணிகளுக்கு முன்னதாக நாற்றங்கால் பாவும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில் சுமார் 15,000 ஏக்கர் அளவில் இருபோகம் நெல் சாகுபடி விவசாயம் தொடர்ந்து காலம் காலமாக நடைபெற்று வருகிறது. கடந்த ஜூன் 1ம் தேதி தமிழக அரசின் உத்தரவின் பேரில் கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகளுக்கு பாசன நீர் பொதுப்பணித்துறை அதிகாரிகளால் திறக்கப்பட்டு தொடர்ந்து ஒரு வாரமாக கடந்து வருகிறது. அதனையடுத்து சின்னமனூர் பகுதியில் சுமார் 4000 ஏக்கர் அளவில் இங்கு இரு போக நெல் சாகுபடி விவசாயம் தவறாமல் சரியாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதன்படி குச்சனூர், துரைசாமிபுரம், மார்க்கையன் கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் கடந்து வரும் பெரியாற்று நீரால் ஆங்காங்கே பெரிய மற்றும் சிறிய துணை வாய்க்கால்களிலும் திறந்து விடப்பட்டுள்ளது.

அதனைக் கொண்டு வயல்வெளிகளில் முதல் போக நெல் நடவிற்கு நாற்றுகள் கிடைக்க முன்னதாக நாற்றங்கால் பாவும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. சரியாக 25 நாட்களில் வளர்த்தெடுக்கும் இந்த நெல் நாற்றினை முதல் போகதிற்கான நடவு பணிகளை இம்மாத இறுதிக்குள் விவசாயிகள் துவக்குவர். மேலும் முன்னதாக விவசாயிகள் வயல்வெளிகளில் டிராக்டரின் மூலம் மண்ணைப் புரட்டி போட்டு இயற்கை உரம் கலந்து தயார்படுத்தும் பணியும் ஒருபுறம் தீவிரமாக நடந்து வருகிறது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161